பொது தகவல் அலுவலர் மற்றும் நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி)

முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர் மாவட்டம்.

<u>தகவல் அறியும் உரிமைச் சட்டம்</u>

ந.க.எண்.573/அ5/2023 நாள் .04.2023

---

பொருள் : பள்ளிக் கல்வி – தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005ன் கீழ் திரு.செந்தில் ஆறுமுகம் என்பவரால் கோரப்பட்ட தகவல்கள் - சார்பு.

பார்வை :
1. சென்னை-6, பள்ளிக் கல்வி ஆணையரகம், பொது தகவல் வழங்கும் அலுவலர் (ம) துணை இயக்குநர் (மின் ஆளுமை) அவர்களின் கடிதம் ந.க.எண்.000241/N2/S2/2023 நாள் 03.02.2023
2. திரு.செந்தில் ஆறுமுகம், எல்டாம்ஸ் சாலை ஆழ்வார்பேட்டை சென்னை 600 018 என்பவரின் மனு நாள் 12.12.2022

-----

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005ன் கீழ் மனுதாரர் திரு.செந்தில் ஆறுமுகம் என்பவர் கோரியுள்ள தகவல்களுக்கு பின்வருமாறு விவரங்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டம் பிரிவு 6(3)ன்படி அனுப்பப்படுகிறது.

தகவல் 6 : அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளின் கழிப்பறைகளை தூய்மையாக வைத்துக் கொள்வதற்கு பின்பற்றப்படும் வழிமுறைகள் குறித்த விவரங்கள்.

தகவல் 8 : அரசுப் பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்யும் பணியினை யார் செய்கிறார்கள் என்பது குறித்த விவரங்கள்.

தகவல் 10 : அரசுப் பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்கள் எத்தனை பேர் என்ற விவரம்.

தகவல் 11: அரசுப் பள்ளிகளில் கழிப்பறைகளை சுத்தம் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களுக்கு 2020 மற்றும் 2021ஆம் நிதி ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை குறித்த விவரம்

ஆகிய தகவல்களை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மனுதாரருக்கு அனுப்பிவிட்டு அதன் நகலினை இவ்வலுவலகம் அனுப்பிவைக்க தெரிவிக்கப்படுகிறார்கள்.

பொது தகவல் அலுவலர் மற்றும்
நேர்முக உதவியாளர் (மேல்நிலைக் கல்வி)
முதன்மைக் கல்வி அலுவலகம், வேலூர்.

பெறுநர்
1. அனைத்து அரசு பள்ளித் தலைமை ஆசிரியர்கள் வேலூர் மாவட்டம்.
2. அரசுதவி பெறும் உயர்/மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள், வே.மா.

19/4/23

நகல்
திரு.செந்தில் ஆறுமுகம்
பு.எண்.4 (R-04) ப.எண்.172
எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை
சென்னை 600 018.